# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | தமிழ் இலக்கிய நயம் - II<br>Appreciation of Tamil Literary Texts II | நேரம் :-<br>2 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 48 T II | |

**கவனிக்க:**

- 1ஆம் வினாவுக்கும், ஏனைய 2,3,4,5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.
- இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு விடை எழுதும் தாளைப் பயன்படுத்துக.

01. பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புக்களின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்'
நேசமாமரியா மக்த லேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்;
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நித்தங் காப்பார்;
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

அன்புகாண் மரியா மக்த லேநா
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து;
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்;
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை;
அன்பெனும் மரியா மக்த லேநா
ஆஹா! சாலப் பெருங்கிளி யிஃதே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண்டடிததால்
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மைகாண் மரியா மக்த லேநா
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃது பயின்றிட லாகும்.

அ. யேசுகிறிஸ்து பற்றி பாரதியார் கூறும் விடயங்கள்.
ஆ. கவிதையினூடாக வெளிப்படுகின்ற வாழ்வியல் கருத்துக்கள்.
இ. மரியா மக்தலேநா சிறப்பிக்கப்படும் விதம்.
ஈ. அணிப்பயன்பாடுகள்.
உ. யேசுகிறிஸ்துவின் உயிர்ப்பை பாரதியார் நோக்கும் முறை.

(30 புள்ளிகள்)

02. **மின்மினிகளால் ஒரு தோரணம்** என்ற கட்டுரையில்

அ. ஹைக்கூவின் அமைப்புமுறை

ஆ. "சுருங்கிய வடிவில் விரிந்த பொருள் ஹைக்கூ" என்ற கூற்றினை ஹைக்கூ கவிதைகளை உதாரணம் காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

03. **தெளிவு** சிறுகதையில்

அ. இயற்கைச் சூழலின் வருணனை

ஆ. பாரூக் நானாவின் குணப்பண்புகள் என்பன வெளிப்படுமாற்றை விபரிக்குக.

(15 புள்ளிகள்)

04. **எலியம்** சிறுகதையில்

அ. அங்கதச் சுவையின் வெளிப்பாடு

ஆ. கதையின் மொழிநடை என்பன பற்றி ஆராய்க.

(15 புள்ளிகள்)

05. **உரிமையும் கடமையும்** கட்டுரையில்

அ. உரிமையும் கடமையும் தொடர்புபடுத்தப்படும் இடங்கள்

ஆ. கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள் என்பன பற்றி விபரிக்குக.

(15 புள்ளிகள்)